இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித் துறை
இயற்கை விஞ்ஞானத்தில் கல்வி இளமாணி சிறப்புப் பட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022
5 வது மட்டம்
இறுதிப் பரீட்சை – 2022
**STU5513/STU 6516–** ஒப்பீட்டுக் கல்வியும் கல்விப் பிரச்சினைகளும்
காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

திகதி: 03.12.2022 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

---

இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி - I இன் சகல வினாக்களுக்கும் பகுதி- II இன் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி – I

i. ஒப்பீட்டுக்கல்வி எனும் எண்ணக்கருவினை விளக்குக.

ii. இயற்கை விஞ்ஞான பாட ஆசிரியரொருவர் ஒப்பீட்டுக் கல்விப் பாட விடயங்களை கற்றல் கற்பித்தல் செயன்முறையில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வழிமுறைகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.

iii. 1902 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட இடைநிலைக்கல்விச் சட்டத்தின் (பெல்பேர் சட்டம்) மூன்று (03) அனுகூலங்களை விளக்குக.

iv. ஆசிரியயொருவரால் மாணவர்களிடத்தில் விருத்தி செய்யப்படவேண்டிய ஏழு (07) தேர்ச்சிகளை பட்டியற்படுத்துக.

v. கல்வி முறைமையின் உள்ளக வினைதிறனில் தாக்கம் செலுத்தும் மூன்று (03) காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டினை (02) விளக்குக.

vi. போர்த்துக்கேயர் காலத்தில் கல்வி நிறுவனங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதம் பற்றிய மூன்று (03) அம்சங்களை விபரிக்குக.

vii. “கல்வி வேலை உலகுடன் தொடர்புபட்டதாக இருக்கும் போது அது நன்மைமிக்கதாக அமையும்” இயற்கை விஞ்ஞான பாடத்துடன் தொடர்புபடுத்தி இக்கூற்றினை விளக்குக.

viii. 1961 ஆம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் மூன்றினை (03) விளக்குக.

(05 x **08** = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9.

i. இலங்கையின் பண்டைய கல்வி முறையின் மட்டங்கள் மூன்றினை (03) எழுதி அவற்றில் ஒன்றினை உதாரணங்களுடன் விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் கல்வி சிறப்பாக ஒழுங்கமைப்பட்டிருந்தது. இக் கூற்றினை நான்கு (04) உதாரணங்களின் துணையுடன் விபரிக்குக.

(08 புள்ளிகள்)

iii. இலங்கையின் பண்டைய கல்வி மட்டங்களில் காணக்கூடியதாகவிருந்த நான்கு (04) முக்கியமான பண்புகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

10.

i. 1932 இல் அறிமுகம் செய்யப்பட்ட 'ஹந்தஸ்ஸ முறைமை' பற்றி விபரிக்குக.

(04 புள்ளிகள்)

ii. 1981 ஆம் ஆண்டின் கல்வி வெள்ளையறிக்கையுடன் தொடர்புபட்ட நான்கு (04) பிரதான சீர்திருத்தங்களை குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

iii. 1972 ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தத்தில் இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நான்கு (04) புதிய விடயங்கள் பற்றி விபரிக்குக.

(08 புள்ளிகள்)

11.

i. 'உலகமயமாதல் என்பது ஒரு இற்றைப்படுத்தல் பற்றியதொரு எண்ணக்கருவாகும்' விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. இயற்கை விஞ்ஞான பாடத்தின் அபிவிருத்திக்காக, உலகமயமாதல் தொடர்பான பண்புகள் உடன்பாடான வகையில் பங்களிப்புச் செய்யும் விதத்தினை விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. உங்களுடைய கற்பித்தல் வகிபங்கினை விருத்திசெய்துகொள்வதற்காக உலகமயமாதல் பற்றிய எண்ணக்கருவினை எவ்வாறு பயன்படுத்திக்கொள்வீர்கள் என நான்கு (04) உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

12.

i. 1947 ஆம் ஆண்டின் ஜப்பானிய அடிப்படைக் கல்வி சட்டத்தின் நான்கு (04) பிரதான மூலங்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

ii. ஜப்பானின் இடைநிலைக் கல்வியின் இரண்டு (02) பிரதான பண்புகளைக் குறிப்பிட்டு, இலங்கையின் இடைநிலைக் கல்வியின் இயற்கை விஞ்ஞான பாடத்தின் விருத்திக்காக அவற்றை எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளலாம் என விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. ஜப்பானின் உயர் கல்வியில் தொழில்நுட்பம் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என விளக்குக.

(08 புள்ளிகள்)

13.

i. மனிதவள அபிவிருத்தி என்பதற்கு உங்களது சொந்த வரைவிலக்கணத்தைத் தருக.

(04 புள்ளிகள்)

ii. ஒரு ஆசிரியர் என்ற வகையில் இந்நாட்டில் இயற்கை விஞ்ஞான பாடத்தின் கற்பித்தல்-கற்றல் செயன்முறையில் எதிர்நோக்கப்படும் நான்கு (04) பிரச்சினைகளை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

iii. நீங்கள் மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நான்கு (04) முன்மொழிவுகளைக் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

14.

i. பிரித்தானியர் காலத்தில் நாட்டினை ஆட்சிசெய்த இரண்டு (02) ஆளுநர்களைக் குறிப்பிட்டு அவர்களில் ஒருவரின் ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட இரண்டு (02) மாற்றங்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

ii. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தின் போது கோல்புறூக் ஆணைக்குழுவினால் கல்வியுடன் தொடர்புபட்டதாக முன்வைக்கப்பட்ட நான்கு (04) முன்மொழிவுகளை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

iii. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் செயற்பட்ட மிசனரி இயக்கத்தின் வகிபாகத்தினை பொருத்தமான நான்கு (04) காரணிகளின் துணையுடன் விபரிக்குக.

(08 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*